எரிமலை சீக்கிரத்தில் வெடிக்கும் என்று தேவன் அறிவித்தார். ஆமோஸ் அவருடைய வாயாக இருந்தார். இன்றைய பாடம் அவர் வழங்கிய செய்தியின் ஒரு பாகமாக இருக்கிறது.

## தற்கால நிலைமைகள் ஒத்திருக்கின்றன

நமது பாடம் நமது காலத்திற்கு பொருத்தமற்றது அல்ல. அநேக நல்ல திசைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும், கிறிஸ்தவ சபைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் பரோபகார உணர்வு உடையவர்கள் அநேகர் இருந்தாலும் ஆபத்து இருக்கிறது. முதலாவது செல்வந்தர்களுக்கு வரக்கூடிய ஆபத்தைக் கவனிப்போம். தற்கால செல்வம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மிகவும் தாழ்மையானவர்களை அடைந்திருக்கிறது. அனைவருக்கும் ஆசீர்வாதங்கள் சிதறியிருக்கின்றன.

ஆனால் உலகின் மொத்த செல்வமும் சிலரின் கைகளில் இருக்கிறது. தங்களையே காயப்படுத்திக் கொள்ளும் ஆபத்தில் ஒழுங்கற்ற செல்வந்தர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர் தங்களது வருமானத்தை செலவு பண்ணும் வழிவகைகளைக் கூட அறியாதிருக்கிறார்கள். ஓய்வு, சந்தோஷம், களிப்பு, சமாதானம் ஆகியவைகளை காணும் நம்பிக்கையில் ஒவ்வொரு வகையான சுகபோகமும் ருசிபார்க்கப்படுகிறது. இவைகளை காணாமல், சந்தோஷத்திற்கான புது வழிகளை மனுக்குலமானது இன்னும் பின் தொடர்கிறது. செல்வமானது பல்வேறு வடிவங்களில் பாவம் மற்றும் துஷ்பிரயோகத்துக்கான அதிகமான சந்தர்ப்பத்தை கொண்டு வருகிறது.

ஏழைகளின் மீதான செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. செல்வந்தர்களும் சோம்பலுள்ளவர்களும் சந்தோஷத்தை அனுபவிக்கிறார்கள் என்று தவறாக கற்பனை பண்ணிக்கொண்டு, ஏழைகள் அதை வீணாக தேடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாக மிகவும் ஏழையானவர்கள் தற்கால ஆச்சரியமான ஆசீர்வாதங்களால் சூழப்பட்டு, பெரும்பாலும் துயர் மிகுந்தவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களது மனங்கள் திருப்தி அடையாதிருக்கின்றன. அவர்கள் சந்தோஷம், களிப்பு, மகிழ்ச்சி ஆகியவைகளை விரும்புகிறார்கள். இவைகளை செல்வத்தின் மூலம் தான் அடைய முடியும் என்று நம்புகிறார்கள். இதன் பலனால் அவர்கள் உள்ளம் கோபம், வன்மம், செல்வந்தர்கள் மீது பொறாமையும் கொள்கின்றன. இப்படியாக மிகுதியான தீமை மற்றும் கொடூரங்களுக்கு வழிவக்குப்பட்டுள்ளது. நமது தற்கால சாதகமான சமூக நிலைமைகள் தந்தி, தொலைபேசி முதலியவைகளின் உதவியுடன் போலீஸ் மற்றும் ராணுவ பலத்தின் மூலம் பராமரிக்கப்படுகிறது என்பது அநேகரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## "ஐசுவரியவான்களை எச்சரியுங்கள்"

அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகள் இந்த காலத்திற்கே மிகவும் பொருத்தமாக இருக்கிறது. ஐசுவரியத்தின் நிச்சயமற்ற தன்மையில் நம்பிக்கையுள்ளவர்கள் தாங்களே எழும்ப வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் தேடுகிற சந்தோஷம் தாங்கள் அனுபவிக்கிறதில்

**R5243 : page 156**

அல்ல, ஆனால் சுயபலியில், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் இருக்கிறது என்கிற பாடத்தை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். உண்மையிலே இதுதான் ஏழை மற்றும் செல்வந்தர்கள் இரு வகுப்பாரும் கற்றுக்கொள்ள வேண்டிய மிகப்பெரிய பாடம் ஆகும். இலட்சக்கணக்கானோர் சந்தோஷத்தையும் களிப்பையும் தேடிக்கொண்டிருக்கும் போது குறிப்பிடும்படியாக மிகவும் சிலரே அதைக் காண்கிறார்கள். அந்த சிலர் தேவனுடைய பரிசுத்த ஜனங்கள் - கத்தோலிக்கர் அல்லது புரட்டஸ்டன்டார்.

மற்றவர்கள் இன்னும் தேடிக்கொண்டிருக்கிறவைகளில், இவர்கள் கண்ட வெற்றியின் இரகசியம், அவர்கள் தெய்வீக வழி நடத்துதலில் இருந்து, தேவனுடைய வசனத்தின் வழிகாட்டுதலை கடைபிடிக்கிற உண்மையில் இருக்கிறது. அவருடைய அறிவுறுத்தல்கள்

